முருகப்பெருமான் துணை

**மகான் இயற்பகை நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**01.05.2024**, புதன்கிழமை

1. உழைக்கும் வர்க்கம் தழைத்து
உயிர் பாதுகாப்புப் பெற வேண்டி
தழைத்து வம்சங்கள் சிறந்து
தானவர்கள் ஞானவான்களாக வேண்டி
2. வேண்டியே அற்புதம் நிகழ்த்தும்
வேலவன் அம்சமான அரங்கனே
உண்டான உன்பெருமை கூறி
உலகத்தில் துல்லிய ஆசிதனை
3. ஆசிதனை குரோதி தகர் திங்கள்
அறிவிக்க மூவாறு திகதி புந்திவாரம்
(குரோதி வருடம் சித்திரை மாதம் 18 ம் நாள், 01.05.2024, புதன்கிழமை)
தேசிகனுக்கு அவதார நோக்கம் சிறப்புற
தெரிவிப்பேன் இயற்பகை நாயனார் யானும்
4. யானுரைக்க இந்தப் பேருலகம்
உயிர்கொலை நீக்கி வாழ்வதற்கு
ஞானமே தயவு வடிவாக இருக்க
நம்பிக்கை வைத்து மக்கள்வர
5. வருகவே அரசனாக முருகன்
வள்ளல் நெறியாக வளர்த்து
தரும சாலைகளை துவக்கி
தடைபடா வண்ணம் செயலாக்கி
6. செயலாக்கி வழிநடத்தி வரும்
சிவராஜயோகி அரங்கன்
தயவே மக்களை மீட்டு
தனவான் தருமவான்களாக மாற்றும்
7. மாற்றும் வல்லமை கூடி
மண்ணுலகம் அரங்கனால்
ஆற்றல்மிக்கப் படைகளை
அமைத்து அற்புதம் நிகழ்த்தும்

8. நிகழ்த்தவே நீதி காக்கின்ற
நிலைத் தன்மை கொண்ட
செகத்தில் ஞானத் தலைமை
சிறப்பாக படைத்து நன்கு

9. படைத்து நன்கு பாதுகாப்புமிக்க
பண்பான ஞான ஆட்சிதனை
தடையற நிறுவி அரங்கன்
தலைமையில் உலகமாற்றம்

10. மாற்றம் அரங்கமகானால்
மகான்கள் வெளிப்பட
ஆற்றல்மிக்க ஞான ஆட்சி
அமைந்து கலியிடர் விலகும்

11. விலகிட ஞானயுகமாகவே
விரைந்து மாற்றம் கண்டு
உலகம் அமைதி பாதுகாப்பும்
உணர்வை பெறும் துல்லிய ஆசி முற்றே

—சுபம்—